[24th August 1961

சர்ச்சையை எழுப்புகிறது. இதற்கு இடம் இல்லாமல் நமது முதல் அமைச்சர் காலத்திலேயே மூன்று வேளை சாப்பாடு போட ஏற்பாடு செய்வார்களா? இது நம்முடைய முதல் அமைச்சரின் கனவாகும். இதை அவர் காலத்திலேயே செயல்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ? அப்போது சர்ச்சையில்லாமல் யாவரும் படிக்க வருவார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்னும் மூன்று வேளையும் சாப்பாடு போடுகிற திட்டம் வரவில்லை. போர்டிங் ஹௌசில் சேர்ந்து படித்தால்தான் அவ்வசதி கிடைக்கும். ஏழை எளிய அநாதை மாணவர்களுக்கு அப்படிச் செய்கிறோம். பொதுவாக எல்லாயிடங்களுக்கும் இத்திட்டத்தை அமுல் செய்வது கஷ்டமாக இருக்கும்.

SRI T. S. RAMASWAMI: May I know the percentage of enrolment of school-going children in these areas?

THE HON. SRI C. SUBRAMANIAM: Though I won't claim 100 per cent, I may state that it is nearabout 100 per cent.

SRI M. K. SOMASUNDARAM : தமிழ்நாடு பூராவுக்கும் எப்போது கட்டாயக் கல்வி கொண்டுவரப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்காக ஒரு திட்டம் போடப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள்ளாக எல்லோரையும் கொண்டுவந்துவிட வேண்டும் என்பது திட்டம்.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that these statistics of non-school-going children are prepared only by the teachers employed in the various schools in that area and not by the Education Department and hence they may not be foolproof statistics? If so, will the Government take steps to make the officers of the Education Department, like the Deputy Inspector or District Educational Officer responsible for preparing these statistics?

THE HON. SRI C. SUBRAMANIAM: Then, it can never be completed. This work had to be done by someone who was on the spot and so, the teachers were considered the best agency. We have to trust that agency to a certain extent. After all, in this matter, they are not interested in showing any false figures.

SRI S. PAKKIRISAMI PILLAI : சென்னை நகரத்தில் இருக்கிற பள்ளிக்கூடகட்டிடங்களுக்கு போதுமான இடவசதி இல்லாத காரணத்தினால் பல பிள்ளைகள் இடம் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்க இடம் கண்டுபிடிக்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதைப் பற்றி கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்கு அரசாங்கத்தார் உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இது கார்ப்பரேஷன் செய்யவேண்டியது. கார்ப்பரேஷனும் தங்கள் கடமையை உணர்ந்து கட்டிடம் கட்டிக் கொண்டு வருகிறார்கள். வாடகைக்கும் கட்டிடம் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். இடைக்காலத்தில் இந்தக் கஷ்டம் ஏற்படத்தான் செய்யும். இந்தக் கஷ்டங்களையும் மீறிக்கொண்டுதான் நாம் காரியங்களைச் செய்ய வேண்டும்.

Poramboke lands (Nilgiri division)

*1373 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether an order for eviction has been given, by the service of the B Memorandum under section 7 of the Madras Act

24th August 1961]

No. III of 1905, to 27 persons who have been living in huts from the year 1952 in natham poramboke land in T.S. No. 3978/7, Nilgiri division, Thanjavur town; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) They were ordered to be evicted for the following reasons :—

(i) that they were not bonafide residents;

(ii) that they were rich persons;

(iii) that the site had been reserved for assignment to houseless peons; and

(iv) that it was not used for residential purposes.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த 27 குடும்பங்கள் பல குடும்பங்களுக்கு மத்தியில் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த 27 குடும்பங்களுக்கு மாத்திரம் தனியாக உத்தரவு போட்டு வெளியேற்ற வேண்டிய அவசியம் என்ன ? இந்த உத்தரவு எந்தக் காரணத்தினால் போடப்பட்டது ? மற்றவர்கள் மத்தியில் இவர்களையும் விட்டுவைக்கமுடியாதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த 27 பேர் காலி பண்ணின இடத்தில் போய் இப்போது குடிசை போட்டுக்கொண்டு ஆக்கிரமித்திருக்கிறார்கள். அங்கேயே அவர்களைவிட்டு வைக்க முடியாததற்குக் காரணம் :—

(1) Ten persons have been ordered to be evicted as the sites have been reserved for assignment to houseless peons.

(2) Nine persons, as they own properties and are not houseless poor.

(3) Seven persons, as they were not bona fide residents.

(4) One person, as the hut was not used for residential purposes.

SRI K. R. NALLASIVAM : தற்போது ஜனத்தொகை பெருகி வருவதன் காரணமாக, அதுவும் நிலமில்லாத ஏழைகளின் ஜனத்தொகை பெருகி வருவதன் காரணமாக ரெவின்யூ இலாகா நபர் ஒன்றுக்கு 5 செண்ட் என்று கொடுத்துக்கொண்டு வருவதை 3 செண்ட் என்றாவது கொடுக்கலாம் என்ற முறையில் அதிகமான பேர்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : நிலம் கொடுக்கிற விஷயம் வேறு. இது ஆக்கிரமிப்பு செய்கிற விஷயம்.

Central Social Welfare Board Schemes

* 1374 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have represented to the Centre that the amount allotted for Central Social Welfare Board Schemes should be spent through the Panchayat Unions or the State Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI N. K. PALANISAMI : மத்திய சமூக நல போர்ட்டில் இருந்து ஏராளமாகச் செலவு செய்யப்படுகிற பணம் சரியான முறையில் செலவு செய்யப்படாத காரணத்தினால் அதை நம் சர்க்கார் தங்கள்